**DEPOSITION OF WITNESS**

| | | |
|---|---|---|
| IN THE COURT OF | : | Judicial Magistrate, Thuraiyur. |
| Case No. | : | CC. 61 of 2021 |
| Prosecution Witness | : | PW6 |

18.11.2025

| | | | |
|---|---|---|---|
| Name | : அழகமுத்து | Calling | : விவசாயம் |
| Father Name | : தன்னாசி | Religion | : |
| Village | : காளியாம்பட்டி | Age | : 74 |
| Taluk | : துறையூர் | | |

**சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.**

1 வது எதிரி ஆஜர். மற்ற எதிரிகள் ஆஜரில்லை. வழக்கறிஞர் ஆஜர். மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது காளியாம்பட்டியில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 முதல் அ.சா.4 நபர்களை தெரியும். ஆஜர் எதிரி மற்றும் மற்ற எதிரிகளை தெரியும். இந்த வழக்கு பற்றி எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி அரசு தரப்பை ஆதரிக்காததால் சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்ககோரி அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டது.**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றும், விசாரணையின் போது 17.10.2020 ம் தேதி பகல் 1.15 மணியளவில் அ.சா.1 அவர் இடத்தில் போட்டிருந்த கடலை கொடியை எதிரிகள் நால்வரும் அள்ளி வீசியுள்ளார்கள் என்றும், அதை செந்தில்குமார், பெருமாள், சின்னபொண்ணு, சித்ரா ஆகியோர்கள் மீண்டும் அள்ளி வைத்தபோது இருதரப்பினருக்கும் இடையே வாய்த்தகராறு ஏற்பட்டது என்று போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. பின்னர் சத்தம்கேட்டு நான் சென்று பார்த்தேன் என்றும், நான் கிட்ட போகும்போது தகராறு முற்றி எதிரிகள் நால்வரும் செந்தில்குமாரின் தரப்பினரை அசிங்கமாக திட்டி, செந்தில்குமாரின் கழுத்தில் போட்டிருந்த வெள்ளி செயினை முறுக்கி, மிரட்டியும், சின்னபொண்ணு தலைமுடியை பிடித்து இழுத்து அடித்தும்,

பெருமாளை செருப்பாள் அடித்தும், தகராறு செய்தார்கள் என்று போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. சம்பவத்தை நான் நேரில் பார்த்துவிட்டு எதிரிகள் எனது ஊரை சேர்ந்தவர்கள் என்பதால் உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை** – இல்லை

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒப்பம்/–அ.நர்மதாராணி,
நீதித்துறை நடுவர், துறையூர்